بسم الله الرحمن الرحيم

الحمد لله وحده وصلاة الله وسلامه على من لا نبي بعده أما بعد :

## مَدْخَلٌ

## فِيْ التَّعْرِيْفِ بِعِلْمِ الْفِقْهِ وَمَصَادِرِهِ وَبَعْضِ مُصْطَلَحَاتِهِ

அல் பிக்ஹ் இன்னும் அதனுடைய அடிப்படைகள் இன்னும் அதன் சில வார்த்தைப் பிரயோகங்கள் பற்றிய ஒரு அறிமுகம்.

**'அல் பிக்ஹ்' என்பதன் கருத்து**

அல் பிக்ஹ் என்பதற்கு இரண்டு கருத்துக்கள் உள்ளன. ஒன்று அரபி மொழியின் நேரிடையான கருத்து. இரண்டாவது பிக்ஹ் கலை வல்லுனர்களிடம் வழக்கத்தில் உள்ள கருத்து.

அரபியில் பிக்ஹ் என்பதற்கு 'விளங்கிக் கொள்ளல்' என்று கருத்து சொல்லப் படும். அல் குர்ஆனில் அல்லாஹ்ºதஆலா கூறுகிறான்:

((وَلَكِنْ لاَ تَفْقَهُوْنَ تَسْبِيْحَهُمْ))

***'என்றாலும் அவைகள் தஸ்பீஹ் செய்வதை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள்'***

வழமையில் அல் பிக்ஹ் என்பது இரண்டு விடயங்களுக்கு பாவிக்கப் படும்.

**முதலாவது:** – அல் முகல்லபுடைய சொல் மற்றும் செயல்களுடன் தொடர்புடையதும், தெளிவான ஆதாரங்களிலிருந்து எடுக்கப்பட்டதுமான ஷரீயத்துடைய சட்டங்களை அறிந்து கொள்வதற்கு சொல்லப் படும்.

தெளிவான ஆதாரங்கள் என்பது அல் குர்ஆன் அஸ்ஸºன்னாஹ் இன்னும் அவை இரண்டிலிருந்தும் பிரிந்த அல் இஜ்மா, அல் இஜ்திஹாத் என்பவைகளாகும்.

இதற்கு உதாரணம் வுளு செய்வதற்கு நிய்யத்து வைப்பது கட்டாயம் என்பதை நபி ஸல்லல்லாஹº அலைஹிவஸல்லம் அவர்களின் கீழ் வரும் வார்த்தைகளின் மூலம் நாம் அறிந்திருப்பதாகும்.

قَالَ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اِنَّمَا الْاَعْمَالُ بِالنِّيَّاتِ ( رواه البخاري : ١ ومسلم :١٩٠٧ )

***'செயல்கள் அனைத்துமே என்னத்தைப் பொருத்ததாகும்'***

இன்னும் வுளுவின் போது தலையில் ஒரு பகுதியை மஸ்ஹº செய்வது அவசியம் என்பதை கீழ்வரும் அல்லாஹ்வின் திரு வசனங்களால் ஆதாரம் எடுக்கப்பட்டது போலாகும்.

(( وَامْسَحُوْا بِرُؤُوْسِكُمْ))

***'உங்கள் தலையை நீங்கள் மஸ்ஹº செய்து கொள்ளுங்கள்'***

எனவே இவ்வாரான ஷரீயத்துடைய சட்டங்களளை நாம் அறிந்து கொள்வதை 'அல் பிக்ஹº' என்று கூறப்படும்.

**இரண்டாவது:** – ஷரீயத்தின் சட்டங்களையே 'அல் பிக்ஹ்' என்று அழைக்கப்படும். இந்த கருத்தின் படி 'ஒருவர் அல் பிக்ஹை கற்றுக் கொள்கிறாய்' என்றால் அதன் கருத்து அவர் அல் குர்ஆன், அல் ஹதீஸ், அல் இஜ்மா இன்னும் அல் இஜ்திஹாத் என்பவைகளில் இருந்து எடுக்கப்பட்டு பிக்ஹº கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஷரீயத்துடைய பிக்ஹ் சட்டங்களை கற்கிறார் என்பதாகும்.

இதற்கு உதாரணமாக வுளுவுடைய சட்டங்கள், தொழுகையுடைய சட்டங்கள், வியாபார கொடுக்கல் வாங்களுடைய சட்டங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே அச்சட்டங்களுக்கு பொதுவாக அல் பிக்ஹ் என்று கூறப்பபடும்.

இரண்டு கருத்துக்களுக்கும் மத்தியில் உள்ள வேறுபாடு என்னவென்றால் முதலாவது சட்டங்கள் அறிந்து கொள்வதற்கு சொல்லப்படும், இரண்டாவது அந்த ஷரீயத்தின் சட்டங்களுக்கே சொல்லப்படும்.

ارْتِبَاطُ الْفِقْه بِالْعَقِيْدَة الْاِسْلَامِيَّة

**<u>இஸ்லாமிய கொள்கையுடன் பிக்ஹுக்குள்ள தொடர்ப்பு</u>**

'அல் பிக்ஹுல் இஸ்லாமியின்' தனித்தன்மை யாதெனில் அது அல்லாஹ்வை உறுதியாக நம்புவதுடன் பலமாக இணைக்கப்பட்டுள்ளது. இது ஏனென்றால் அல்லாஹ்வை பூரணமாக நம்புவது தான் மனிதனை ஷரீயத்தின் சட்டங்களின் படி நடக்குமாறு தூண்டுகிறது. இந்த இணைப்பைப் பற்றி அல்லாஹுதஆலா திரு மறையில் பல இடங்களில் வழியுறுத்தியுள்ளான். அவற்றில் சில,

اَلَّذِيْنَ يُقِيْمُوْنَ الصَّلَاةَ وَيُؤْتُوْنَ الزَّكَاةَ وَهُمْ بِالْآخِرَةِ هُمْ يُوْقِنُوْنَ ( سورة النمل : الاية ٣ )

***'அவர்கள் எத்தகையவர்கள் என்றால், தொழுகையை நிலை நாட்டுவார்கள். இன்னும் ஸகாத்தும் கொடுப்பார்கள். மேலும் மறுமை நாளை அவர்கள் உறுதியாக நம்பியிருப்பார்கள்'***

இந்த வசனத்தில் அல்லாஹுதஆலா தொழுகையையும் ஸகாத்தையும் கூறிவிட்டு அவை இரண்டையும் மறுமை நாளை ஈமான் கொள்வதுடன் இணைத்துள்ளான். இவ்வாறே அல்லாஹுதஆலா குர்ஆனில் உள்ள தீனுடைய சட்டங்களை ஈமான் கொள்வதுடனும் தீனின் கொள்கைகளுடனும் இணைத்தே கூறுகிறான்.

شُمُوْلُ الْفِقْهِ الْاِسْلَامِيْ لِكُلِّ مَا يَحْتَاجُ إِلَيْهِ النَّاسُ

***மனிதர்களுக்குத் தேவையான அனைத்துமே அல் பிக்ஹுல் இஸ்லாமியில் அடங்கியுள்ளது.***

சந்தேகமின்றி மனிதனின் வாழ்க்கை பலதரப்பட்டது. மனிதன் ஈடேருவதற்கு இந்த அனைத்து வகையான நிலைகளையும் உட்படுத்தி சட்டங்களை ஆக்குவது தேவையாகிறது. இதன் காரணமாக பிக்ஹுல் இஸ்லாமி வாழ்க்கையின் சகல நிலைகளையும் கவணித்து அவை எல்லாவற்றிற்கும் தீர்வுகளை தரக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாரிய நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதனாலேயே இது 7 பிரிவுகளாக ஆகின்றது.

<u>முதலாவது பிரிவு</u>

இது அல்லாஹ்வை வணங்குவது சம்பந்தமான தொழுகை, நோன்பு, ஹஜ், ஸகாத் போன்ற விடயங்களின் சட்ட திட்டங்களை உள்ளடக்கியது. இதற்கு (اَلْعِبَادَاتْ) 'இபாதத்தின்' பகுதி என்று கூறப்படும்

**<u>இரண்டாவது பிரிவு</u>**

இது திருமணம், தலாக், பாகப்பிரிவினை போன்ற குடும்பம் குடும்ப வாழ்க்கை சம்பந்தமான சட்டங்களை உள்ளடக்கியது. இந்த பகுத்திக்கு (اَلْاَحْوَالُ الشَّخْصِيَّةُ) என்று சொல்லப் படும்.

**<u>மூன்றாவது பிரிவு</u>**

இது அடகு வைத்தல், விற்பனை செய்தல், வாடகை, தீர்ப்புகள் போன்ற மனிதர்களின் செயல்கள் தொடர்பான சட்டங்களைப் பற்றியது. இந்த பிரிவிட்கு (اَلْمُعَامَلَاتُ) முஆமலாத்துடைய பிரிவு என்று கூறப்படும்.

<u>நான்காவது பிரிவு</u>

'அல் ஹாகிம்' என்று அழைக்கப்படும் இப்பிரிவு ஆட்சியாளரின் கடமைகள், நீதியை நிலை நாட்டல், அநியாயத்தை தடுத்தல் போன்றவையோடு குடிமக்களின் கடமைகள் நாட்டுப் பற்றுடன் வாழ்தல் போன்ற விடயங்கள் தொடர்பான சட்டங்களை உட்படுத்தியதாகும். இந்த பிரிவை ( اَلْاَحْكَامُ السُّلْطَانِيَّةُ) என்றும் (اَلسِّيَاسِيَّةُ الشَّرْعِيَّةُ) என்றும் அழைக்கப் படும்.

**<u>ஐந்தாவது பிரிவு</u>**

இது கொலை, திருட்டு போன்ற குற்றங்களுக்குறிய தண்டனை பற்றிய பிரிவாகும். இப்பிரிவிட்கு (اَلْعُقُوْبَاتُ) என்று கூறப்படும்.

**ஆறாவது பிரிவு**

இது இஸ்லாமிய நாடுகள் ஏனைய நாடுகளுடன் வைத்துக் கொள்ள வேண்டிய இராஜதந்திர உறவுகளைப் பற்றிய பிரிவாகும். இப்பிரிவிட்கு (اَلسِّيَرُ) என்று கூறப்படும்.

**ஏழாவது பிரிவு**

இது நற்குனங்கள் நன்னடத்தை மற்றம் தீய நடத்தைகள் தொடர்பான சட்டங்களை உள்ளடக்கியதாகும். இதை (اَلْآدَابُ وَالْاَخْلاَقُ) என்று கூறப்படும்.

இவ்வாராக 'அல் பிக்ஹுல் இஸ்லாமி' மனிதனுக்குத் தேவைப்படக்கூடிய சகல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் தீனை இலகுவாக்கி சகலரும் செயல்படத்தக்கூடிய வழிகளை இது எல்லா சந்தர்ப்பங்களிலும் முன் வைக்கின்றது. பொதுவாக தீனுல் இஸ்லாம் மனிதர்களுடைய நிலைகளையும் இயலாமைகளையும் கவணித்தே அவனுக்கு சட்டங்களை இடுகிறது. தீனில் மனிதனால் நிறைவேற்ற முடியாதது எதுவும் கட்டளையாக இடப்படவில்லை. குறிப்பிட்ட நபர்களின் சிரமமான நிலைகளை அனுசரித்து இலகுவான மாற்று வழிகளை இஸ்லாம் சொல்கிறது.

இஸ்லாம் ஒரு இலகுவான மார்க்கம் என்பதை அல்லாஹுதஆலா தனது திரு மறையில் பல இடங்களில் இவ்வாறெல்லாம் குறிப்பிட்டுள்ளான்.

وَمَا جَعَلَ عَلَيْكُمْ فِيْ الدِّيْنِ مِنْ حَرَجٍ

***'அவன் இந்த தீனில் உங்களுக்கு எந்த கஷ்டத்தையும் ஆக்கவில்லை'***

يُرِيْدُ اللهُ بِكُمُ الْيُسْرَ وَلاَ يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ

***'அல்லாஹ் உங்களுக்கு இலகுவையே நாடுகிறான். அவன் கஷ்டத்தை நாடவில்லை'***

لاَ يُكَلِّفُ اللهُ نَفْسًا اِلاَّ وُسْعَهَا

***'அல்லாஹுதஆலா எவரையுமே அவரது சக்திக்கு மேலாக கட்டாயப்படுத்துவதில்லை'***

وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ اِنَّ الدِّيْنَ يُسْرٌ ( رواه البخاري ٣٩ )

***'நிச்சயமாக இந்த மார்க்கம் இலகுவானது'***

இஸ்லாம் இலகுவானது என்பதற்கு உதாரணமாக நின்று தொழ முடியாதவர்களுக்கு உட்கார்ந்து தொழ முடியும் என்ற கருத்துள்ள நபி மொழியையும் குறிப்பிடலாம்.

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ صَلِّ قَائِمًا فَاِنْ لَمْ تَسْتَطِعْ فَقَاعِدًا فَاِنْ لَمْ تَسْتَطِعْ فَعَلى جَنْبٍ (رواه البخاري ١٠٦٦ )

***'நின்று தொழுவீராக. அது உமக்கு முடியாவிட்டால் அமர்ந்து தொழுவீராக. அதுவும் முடியாவிட்டால் படுத்தவராக தொழுவீராக'***

## مَصَادِرُ الْفِقْهِ الإِسْلاَمِيِّ
## அல் பிக்ஹுல் இஸ்லாமீயின் அடிப்படை மூலாதாரங்கள்

அல் பிக்ஹுல் இஸ்லாமியில் உள்ள அனைத்து சட்டங்களுமே நான்கு மூலாதாரங்களின் மீதே உள்ளன. அவையாவன,

(اَلْقُرْآنُ) அல்குர்ஆன்

(اَلسُّنَّةُ) அஸ்ஸுன்னாஹ்

(اَلإِجْمَاعُ) அல் இஜ்மா

(اَلْقِيَاسُ) அல் கியாஸ்

### அல் குர்ஆன் (اَلْقُرْآنُ الْكَرِيْمُ)

இது அல்லாஹ்வின் பேச்சாகும். மனிதர்களை இருளிலிருந்து வெளிச்சத்தின் பக்கம் திருப்புவதற்காக இது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீது அல்லாஹ் இறக்கி வைத்தான். இது தான் இஸ்லாமிய சட்டங்களின் முதலாவது அடிப்படையாகும். ஏதாவது சட்டப் பிரச்சினை ஏற்பட்டால் நாம் முதலாவது திரு மறையின் பக்கமே திரும்ப வேண்டும். அதில் அதற்கான சட்டம் பெறப்பட்டால் ஏனை மூலாதாரங்களின் பக்கம் நாம் திரும்ப ண்டிய தேவை இல்லை. உதாரணமாக வியாபாரம், வட்டி பற்றிய சட்டங்களுக்காக நாம் திரு மறையின் பக்கம் திரும்புவது போதுமானதாகும். அதில்,

وَاَحَلَّ اللهُ الْبَيْعَ وَحَرَّمَ الرِّبَا ( سورة البقرة : الآيَةُ ٢٧٥ )

***'வியாபாரத்தை அல்லாஹ் ஆகுமாக்கி வட்டியை தடுத்துள்ளான்'***

என்று தெளிவாக உள்ளது.

அல் குர்ஆனில் அடிப்டையான விடயங்கள் அனைத்தும் உட்படுதத்தப் பட்டிருந்தாலும் அதன் விரிவான தெளிவுகளை அதில் கூறப்படவில்லை. இஸ்லாமிய அகீதா தொடர்பானவை விளக்கமாக கூறப்பட்டிருப்பதுடன் வணக்கங்கள், உலக வாழ்க்கை சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் மேலோட்டமாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. உதாரணமாக தொழுகை பற்றி கட்டளையிடப்படடிருந்தாலும் அதன் பூரண சட்ட விளக்கங்களை 'ஸுன்னத்துன் நபவிய்யாவிற்கே' விட்டுள்ளது. நபியின் ஸுன்னத்து அல் குர்ஆனுடன் பிண்ணிப் பினைந்ததாகவே உள்ளது.

### அஸ்ஸுன்னாஹ் (اَلسُّنَّةُ الشَّرِيْفَةُ)

'அஸ்ஸுன்னாஹ்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சொல், செயல் மற்றும் அங்கீகாரத்திட்கு கூறப்படும்.

அவருடைய சொல்லிற்கான உதாரணம்:

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ ((سِبَابُ الْمُسْلِمِ فُسُوْقُ وَقِتَالُهُ كُفْرٌ)) (رواه البخاري: ٤٨ ومسلم: ٦٤)

***'ஒரு முஸ்லிமை ஏசுவது பாவமாகும். அவரை கொலை செய்வது குப்ராகும்'***

செயலுக்கு உதாரணம்:

مَارواه البخاري عَنْ عَائِشَةَ رَضِىَ اللهُ عَنْهَا لَمَّا سُئِلَتْ مَاكَانَ يَصْنَعُ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِيْ بَيْته ؟ قَالَتْ : كَانَ يَكُوْنُ فِيْ مَهْنَةِ اَهْلِهِ ، فَاِذَا حَضَرَتِ الصَّلاَةُ قَامَ إِلَيْهَا

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வீட்டில் எவ்வாரு இருப்பார்கள் என்று கேட்கப்பட்ட போது ஆயிஷா ஸித்தீகா ரலியல்லாஹு அன்ஹா அர்கள் 'நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தாங்கள் குடும்பத்தினருக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். தொழுகை நேரம் வந்துவிட்டால் தொழுகைக்காக சென்று விடுவார்கள்.'

அன்னாருடைய அங்கீகாரத்திட்கு உதாரணம்:

مَارواه ابوداود (١٢٦٧) ان النبي صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ رَأى رَجُلاً يُصَلِّى بَعْدَ صَلاَةِ الصُّبْحِ رَكَعَتَيْنِ فَقَالَ ((صَلاَةُ الصُّبْحِ رَكَعَتَعَان)) فَقَالَ الرَّجُلُ : إِنِّيْ لَمْ اَكُنْ صَلَّيْتُ الرَّكَعَتَيْنِ الَّتِيْ قَبْلَهُمَا فَصَلَّيْتُهُمَا اْلآنَ فَسَكَتَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ

***இறை தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஒரு மனிதன் சுபஹுத் தொழுகைக்குப் பின்னால் இரண்டு ரகஅத்துகளை தொழுவதைக் கண்டு 'சுப்ஹுத் தொழுகை இரண்டு ரகஅத்துகள் தான்' என்ற கூறினார்கள். அதற்கு அந்த மனிதர் தான் சுபஹுத் தொழுகைக்கு முன்னுள்ள இரண்டு ரகஅத்துகளை தொழவில்லை என்றும், அதைத்தான் இப்பொழுது தொழுததாகவும் கூறினார். நபியவர்கள் மௌனமாகி விட்டார்கள். நபியவர்களின் இந்த மௌன அங்கீகாரம், சுபஹுத் தொழுகையின் சுன்னத்துத் தொழுகையை சுபஹுக்கு பின்னும் தொழ அனுமதியுண்டு என்ற சட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள போதுமான சான்றாக எடுக்கப்பட்டது.***

ஆக, அல் குர்ஆனுக்குப் பிறகுள்ள பலமான சட்ட அடிப்படை 'ஸுன்னா' வாகும். அதன் படி செயல்படுவது முஸ்லிம்களுக்கு வாஜிபாகும். மேலும் குர்ஆனை விளங்குவதற்கும் செயலாற்றுவதற்கும் நபியவர்களின் முன்மாதிரியான 'ஸுன்னா' இன்றியமையாததாகும். உதாரணமாக தொழுகையைப் பற்றியும் ஏனைய அமல்களைப் பற்றியும் குர்ஆன் அவைகளின் கட்டாயத்தின் அந்தஸ்துகளை மாத்திரம் கூறியுள்ளதோடு அவைகளை பூரணமாக நிறைவேற்றும் விதம் நபியவர்கள் மூலமே அறியப்பட்டது. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் ஒரு முறை இவ்வாரு கூறினார்கள்.

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمْ ((صَلُّوْا كَمَا رَاَيْتُمُوْنِيْ اُصَلِّيْ)) (رواه البخاري)

***'நான் எவ்வாரு தொழுகிறேனோ அவ்வாரே நீங்களும் தொழுங்கள்'***

## **'அல் இஜ்மா'** (اَلاِجْمَاعُ)

இஜ்மா என்றால் ஒரே காலத்தில் வாழக்கூடிய நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களது உம்மத்தில் முஜ்தஹிதான உலமா அனைவரும் ஒன்று கூடி ஒரு ஷரீயத்து சட்டத்தை ஏகோபித்து முடிவு செய்வதாகும். இதற்கு ஆதாரம்:

روى احمد في مسنده (٣٩٦/٦ ) عن ابن بصرة الغفاري رَضِىَ اللّٰهُ عَنْهُ : ان رسول الله صَلَّى اللّٰهُ عَلَيْه وَسَلَّم قَالَ : ((سَأَلْتُ اللهَ عَزَّ وَجَلَّ اَنْ لاَّيَجْمَعَ اُمَّتِيْ عَلَى ضَلاَلَةٍ فَأعَطَانِيْهَا))

***நபி அவர்கள் கூறினார்கள் 'எனது உம்மத்து அனைவரும் ஒரு வழிகேட்டில் ஒன்று படக் கூடாதென நான் அல்லாஹ்விடம் துஆக் கேட்டேன். அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.'***

தந்தை இல்லாத போது மகன் இருப்பதுடன் பாட்டன் ஆறில் ஒரு பாகத்தை இறந்தவர் விட்டுச் செல்வார் என்ற விடயத்தில் சஹாபாக்கள் ஒன்று பட்டமை அல் இஜ்மா செயற்படுத்தப் பட்டமைக்கு சஹாபாக்களது முன்னுதாரணமாகும்.

எனவே, ஏதாவதொரு விடயத்திற்கு அல் குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் சட்டம் கிடைக்கவில்லை என்றால் நாம் நோக்க வேண்டிய மூன்றாவது மூலம் அல் இஜ்மாவாகும்.

__அல் கியாஸ் (اَلْقِيَاسُ)__

கியாஸ் என்றால், முன் சொல்லப்பட்ட மூன்று அடிப்படைகளில் நேரடியாக காணாத ஒரு விடயத்தின் தீர்ப்பு, அவைகளில் குறிப்பிட்டுள்ள வேறு ஒரு விடயத்துடன் ஒத்திருந்து, அதன் அடிப்படையில் சட்டத்தை வகுப்பதற்கு சொல்லப் படும். உதாரணமாக (اَلْخَمْرُ) என்ற திராட்சையிலிருந்த பெறப்படும் சாராயத்தை ஹராம் என்று அல்லாஹ் தடுத்துள்ளான். இத்தடைக்குக் காரணம் அதிலுள்ள போதை தரக்கூடிய தன்மையாகும். இதனடிப்படையில் போதை தரக்கூடிய அனைத்து விடயங்களையும் ஹராம் என்று சட்டமாக்கியது கியாஸின் அடிப்படையிலேயாகும். ஏனென்றால் புது விதமான பெயரில் மது வகைகள் வந்தாலும் அவைகளின் அடிப்படை நோக்கமாகிய போதை தருவதில் எல்லாம் சமமாகவே இருக்கின்றன.

__அல் பிக்ஹுல் இஸ்லாமியை பற்றிப்பிடிப்பதன் அவசியம்__

அல் பிக்ஹுல் இஸ்லாமியின் சட்டங்கள் அனைத்துமே அல் குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள் மீது அமைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் பிந்தைய இரண்டு மூலங்களாகிய அல் இஜ்மா மற்றும் அல் கியாஸ் இரண்டும் குர்ஆன் ஹதீஸின் மீதே பெறப்படுகின்றது. ஆக, அல் பிக்ஹுல் இஸ்லாமியை விடுவது பாவத்தால் அல் குர்ஆனையும் ஹதீஸையும் புறக்கனிப்பதற்கு சமமாகும். அவைகளை புறக்கனிப்பது இஸ்லாத்தையே புறக்கனித்து விட்ட ஆபத்தில் கொண்டு போய் சேர்த்து விடும். அவ்வாறு ஆகியவன் இஸ்லாத்தை விட்டே நீங்கியவனாகிறான். அல்லாஹ்வின் பேச்சையும் நபியையும் உண்மை படுத்துபவனே முஸ்லிமாவான். அல் பிக்ஹுல் இஸ்லாமியை கடைபிடிப்பது அவசியம் என்பது பற்றிய ஆதாரம் குர்ஆனில் இவ்வாருள்ளது.

((اتَّبِعُوْا مَا اُنْزِلَ إِلَيْكُم مِنْ رَّبِّكُمْ وَلاَ تَتَّبِعُوْا مِنْ دُوْنه اَوْلِيَاء)) (سورة الاعراف : الاية ٣ )

***உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்கு இறக்கி வைக்கப்பட்டதையே நீங்கள் பின்பற்றுங்கள். அவனல்லாதவர்களை உங்களது பாதுகாவலர்களாக்கி அவர்களை பின்பற்றாதீர்கள்'***

((وَمَا آتَاكُمُ الرَّسُوْلُ فَخُذُوْهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانْتَهُوْا)) (سورة الحشر: الاية ٧ )

***'தூதர் கொண்டு வந்ததை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதை விட்டும் உங்களை தடுக்கிறாரோ அவைகளை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள்'***

இது தொரர்பாக அல் ஹதீஸில் இவ்வாரு வந்துள்ளது,

((تَرَكْتُ فِيْكُمْ مَا إِنْ اَخَذْتُمْ بِهِ لَنْ تَضِلُّوْا بَعْدِيْ : كِتَابُ اللهِ وَسُنَّتِيْ)) (رواه مسلم : ١٢١٨ )

***'நான் உங்களிடம் விட்டுச் செல்வதை நீங்கள் எடுத்து நடந்தால் எனது மறைவிற்குப் பின்னால் நீங்கள் வழி தவற மாட்டீர்கள். அவையாவன, அல்லாஹ்வின் வேதமும் என்னுடைய வழிமுறையுமாகும்'***

__اَلتَّعْرِيْفُ بِبَعْضِ الْمُصْطَلَحَات الْفِقْهِيَّة__

**அல் பர்ள் (اَلْفَرْضُ)**

அல் பர்ள் என்றால் அதை கட்டாயமாக செய்யும்படி ஷரீயத்து கட்டளையிட்டுள்ளதும், அதனை செய்வதால் நன்மையும் விட்டு வடுவதால் தண்டனையும் உண்டென்று கூறியுள்ளவைகளுமாகும்.

அல்லாஹ் கூறுகிறான்:

((كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ)) (سورة البقرة : الاية ١٨٣ )

***'நோன்பு நோட்பது உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது.'***
ஆகவே நோன்பு நோட்பதால் நன்மையும் அதை காரணமின்றி விடுவதால் தண்டனையும் உண்டு.

**அல் வாஜிப் (اَلْوَاجِبُ)**

'அல் வாஜிப்' என்பதற்கும் அல் பஃர்ள் என்பதற்கும் ஷாபியீ மத்ஹப்பில் எந்த வேறுபாடும் கிடையாது. ஆனால் ஹஜ்ஜுடைய அமலைத் தவிர. ஹஜ்ஜின் அமலின் போது எவைகளை செய்வதன் மீது ஹஜ் நிறைவேறுவது தங்கியிருக்க மாட்டாதோ அவைகள் வாஜிபாகும். இன்னொரு விதத்தில் கூறினால் எவைகளை விட்டு விட்டாலும் ஹஜ் நிறைவேருமோ அந்த செயல்களின் அந்தஸ்த்து 'வாஜிப்' எனப்படும்.

உதாரணமாக, மீகாத்திலிருந்து இஹ்ராம் அனிவது, கல் அடிப்பது போன்றவற்றைக் கூறலாம். இவைகள விட்டு விட்டாலும் ஹஜ்ஜுடைய கடமை நிறைவேறவே செய்யும். ஆனால் அவ்வாரு விடடதற்காக பிராச்சித்தமாக இரத்தத்தை ஓட்டி 'பித்யா' கொடுக்க வேண்டும்.

எவைகளை செய்வதன் மீது ஹஜ் நிறைவேறுவது தங்கியுள்ளதோ அவைகள் ஹஜ்ஜின் பஃர்ளுகள் எனப்படும். அதாவது எந்த செயல்களை விட்டு விடுவதால் ஹஜ்ஜின் கடமை 'பாதிலாகி' செல்லுபடியற்றதாகி விடுமோ அவைகள் ஹஜ்ஜின் பஃர்ளுகள் எனப்படும். உதாரணமாக அரபாஃ மைதானத்தில் தரிப்பதை குறிப்பிடலாம். அது தவறி விட்டால் அவருக்கு ஹஜ் 'பாதிலாகி' விடும்.

**பஃர்ள் ஐன். (اَلْفَرْضُ الْعَيْنِيُّ)**

பஃர்ள் ஐன் என்று ஒவ்வொரு தனி மனிதனும் செய்வத கட்டாயமான செயல்களுக்கு சொல்லப்படும். சிலர் மாத்திறம் அதை செய்வது போதாது. உதாரணமாக தொழுகை நோன்பு போன்றவைகள்.

**பஃர்ள் கிபாஃயா (اَلْفَرْضُ الْكِفَائِيُّ)**

பஃர்ள் கிபாஃயா என்பது முஸ்லிம்களில் ஒரு கூட்டம் அதை செய்து விட்டால் போதுமானது. ஒவ்வொருவரும் அதை செய்ய வேண்டும் என்பதில்லை. ஆனால் எவருமே செய்யாவிட்டால் அனைவரும் குற்றவாளியாகி விடுவார்கள். உதாரணமாக ஒரு ஊரில் ஒருவர் மௌத்தாகி விட்டால் அவரை குளிப்பாட்டி, கபணிட்டு, தொழுவித்து, அடக்கம் செய்வது பொதுவான ஒரு கடமையாகும். இதனை சிலர் செய்து விட்டாலும் அனைவரும் பொருப்பிலிருந்து நீங்கி விடுவர். செய்தவர்கள் நன்மை அடைவர். ஆனால் எவருமே செய்யாவிட்டால் அனைவரும் குற்றவாளிகளாகி விடுவரர்கள்.

**அர் ருக்ன் (اَلرُّكْنُ)**

ருக்ன் என்றால் இதை செய்வது கடமையாகும். ஆனால் அது செயலின் ஒரு பகுதியே ஆகும். உதாரணமாக தொழுகையில் ஸஜ்தா, ருகூஉ போனற் செயல்கள்.

**அஷ் ஷரத் (اَلشَّرْطُ)**

ஷரத் என்றால் அதை செய்வது கடமையாகும். ஆனாலும் அது செயலின் ஒரு பகுதியாகவும் இல்லை. மாறாக அது ஒரு செயலுக்கு முன்னால் உள்ள நிபந்தனைகளாகும். உதாரணமாக தொழுகைக்கு முன் வுளு செய்வது, கிப்லாவை

முன்னோக்குவது போன்றவை. அவை தொழுகை நிறைவேற மிக அவசியாமாகும். ஆனால், இவை தொழுகையின் அம்சங்கள் அல்ல.

**<u>அல் மண்தூப் (اَلْمَنْدُوْبُ)</u>**

மண்தூப் என்றால் இதை செய்யும் படி ஷரீயத்து கூறுகிறது. ஆனால் கடமையாக்கவில்லை. இதனை செய்வதனால் நன்மை கிடைக்கிறது. விட்டு விடுவதனால் குற்றமோ தண்டனையோ இல்லை. உதாரணமாக 'ழுஹா'த் தொழுகை, ஷவ்வால் மாதத்து 6 நோன்புகள் போன்றவற்றைக் கூறலாம். இதை ஸுன்னத் (سُنَّةٌ), முஸ்தஹப் (مُسْتَحَبٌّ), ததவ்வு (تَطَوُّعٌ), நபிஃல் (نَفلٌ), என்ற பெயர்களாலும் அழைப்பதுண்டு.

**<u>அல் முபாஹ் (اَلْمُبَاحُ)</u>**

முபாஹ் என்றால், அதை விடுவதும் செய்வதும் சமமானதே. ஷரீயத்து இதை செய்யும் படி நம்மை ஏவவுமில்லை. இதை விட்டு விடும்படி தடுக்கவுமில்லை. அதாவது செய்வதால் நன்மை வாக்களிக்கப்படவோ, விடுவதால் தண்டனை எச்சரிக்கப்படவோ இல்லாத விடயங்கள் இவையாகும். உதாரணமாக குர்ஆனில்,

((فَاِذَا قُضِيَتِ الصَّلاَةُ فَانْتَشِرُوْا فِيْ الْاَرْضِ وَابْتَغُوْا مِنْ فَضْلِ اللهِ)) (سورة الجمعة : الاية ١٠ )

***'தொழுகை நிறைவேற்றப் பட்டுவிட்டால் பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடிக்கொள்ளளுங்கள்'***

என்ற திரு வசனத்தின் மூலம் கூறப்பட்டிருப்பதை செய்வதோ, செய்யாது விடுவதோ போன்றதாகும். இரண்டும் ஒன்றுதான்.

**<u>அல் ஹராம் (اَلْحَرَامُ)</u>**

ஷரீயத்து எதை விட்டு விடுங்கள் என்று கட்டாயமாக எம்மை தடுக்கிறதோ அதுவே ஹராம் என்பதாகும். அதாவது இவைகளை செய்வதனால் தண்டனையும், விட்டு விடுவதால் நன்மையும் கிடைக்கும். உதாரணமாக ஒருவரை அநியாயமாக கொலை செய்வது, ஒருவருடைய சொத்தை அபகரிப்பது போன்ற பாவச் செயல்களை குறிப்பிடலாம். அல்லாஹுதஆலா திருக் குர்ஆனில் இவ்வாரு கூறுகின்றான்:

((وَلاَ تَقْتُلُوْا النَّفْسَ الَّتِيْ حَرَّمَ اللهُ إلاَّ بِالْحَقِّ)) (سورة الاسراء : الاية ٣٣١ )

***'மேலும் அல்லாஹ் தடுத்துள்ள எந்த உயிரையும் உரிமையின்றி கொலை செய்யாதீர்கள்.'***

ஹராத்திற்கு மஹ்ழுர் (اَلْمَحْضُوْرُ), மஃஸியத்து (اَلْمَعْصِيَةُ), ஸன்ப் (اَلذَّنْبُ), என்ற பெயர்களும் உண்டு.

**<u>அல் மக்ரூஹ் (اَلْمَكْرُوْهُ)</u>**

மக்ரூஹ் என்பது இரு வகைப் படும். அவை **மக்ரூஹ் தஹ்ரீமி** மற்றும் **மக்ரூஹ் தனஸீஹ்** ஆகியனவாகும்.

**<u>மக்ரூஹ் தஹ்ரீமி (اَلْمَكْرُوْهُ التَّحْرِيْمِيُّ)</u>**

மக்ரூஹ் தஹ்ரீமா (اَلْمَكْرُوْهُ تَحْرِيْمًا) என்றால் அதனை விட்டு விடும்படி ஷரீயத் வழியுறுத்துகிறது. ஆனால் அந்த வற்புறுத்தல் ஒரு ஹராத்தின் விடயத்தில் உள்ளது போல் தீவிரமாக இல்லை. இவைகளை விடுவதால் நன்மையும், செய்வதால் தண்டனையும் உண்டு. ஆனால் ஒரு ஹராத்தை செய்தால் கிடைக்கும் தண்டனையளவு கடுமையான தண்டனை கிடைப்பதில்லை. சூரியன் உதிக்கும் போது நபில் தொழுவது போன்ற விரும்பத் தகாத செயல்களை உதாரணத்திற்கு குறிப்பிடலாம்.

**<u>மக்ரூஹ் தன்ஸீஹி (اَلْمَكْرُوْهُ التَّنْزِيْهِيُّ)</u>**

மக்ரூஹ் தன்ஸீஹா (اَلْمَكْرُوْهُ تَنْزِيْهًا) என்றால் இதனை ஷரீயத்த கட்டாயமின்றி தடுக்கிறது. இதனை விட்டுவிட்டால் நற்கூலி கிடைக்கும். ஆனால் செய்பவர்கள் தண்டிக்கப்படவும் மாட்டார்கள். ஒரு ஹாஜி அரபாஃவுடை நாளில் நோன்பு நோற்பதை உதாரணத்திற்கு குறிப்பிடலாம்.

**அல்அதா (اَلْاَدَاءُ)**

அதா என்றால் ஒரு வணக்கத்தை அதற்காக ஷரீயத் வரையருத்துள்ள நேரத்திற்குள் நிறைவேற்றி விடுவதாகும். உதாரணமாக ரமழானுடைய நோன்பை அந்த மாதத்திலேயே நோற்பது போன்ற விடயங்கள்.

**அல் கழா (اَلْقَضَاءُ)**

கழா என்றால் ஒரு கடமையான அமலை ஷரீயத்து அதற்காக நிர்னயித்த கால எல்லைக்குள் செய்யாது, அது கடந்து முடிந்த பிறகு செய்வதாகும். இது பாவமாகும். உதாரணமாக ரமழானுடைய நோன்பை அதுவல்லாத மாதத்தில் நோற்பது போன்றதாகும். ஒரு வணக்கம் தங்கடத்தால் பிற்படுத்தும் படி நேரிட்டாலும் அதை கழாச் செய்வது வாஜிபாவதோடு அவ்வாரு தங்கடத்துடன் விட்டது பாவமாகாது.

**அல் இஆதத் (اَلْإِعَادَةُ)**

இஆதா என்பது ஒரு வணக்கத்தின் கை தவறிப் போன பூரண நற்கூலியை பெற்றுக் கொள்ள அதனை மீணடும் நிறைவேற்றுவதாகும். உதாரணமாக ஒருவர் ழுஹர் தொழுகையை தனியாக தொழுது முடித்த பிறகு சிலர் ஒன்று சேர்ந்து அதை ஜமாஅத்தாக தொழுவதை கண்டு மீண்டும் அவர்களுடன் சேர்ந்து தொழுது கொள்வது போன்றாகும். இவ்வாரு செய்தல் ஸுன்னத்தாகும். ஜமாஅத்துடைய நன்மை இங்கு ஆசை வைக்கப்படுவதால்.

اَحْكَامُ الطَّهَارَةِ

**சுத்தத்தின் சட்டங்கள்**

சுத்தம் என்றால் ஷரீயத்தின் பார்வையில் தொழுகையை ஆகுமாக்கக்கூடிய நிலையாகும். அல்லது தொழுகையின் அந்தஸ்திலே உள்ள ஒரு அமலை செய்வதற்கு தேவையான பரிசுத்த நிலையாகும். உதாரணமாக வுழு இல்லாதவன் வுழு செய்வதை போன்றதாகும். இன்னும் யாருக்கு குளிப்பு கடமையோ அவர் குளிப்பதை போன்றதாகும். மேலும் உடல், ஆடை மற்றும் இடத்தில் உள்ள அசுத்தங்களை நீக்குவதுமாகும்.

சுத்தத்திற்கு இஸ்லாம் கொடுத்துள்ள முக்கியத்துவம்

சுத்தத்ததிற்கு முழுமையான முக்கியத்துவத்தை கொடுத்துள்ள ஒரே மார்க்கம் இஸ்லாமாகும். அவைகளில் உள்ளவைகள் தான்,

- உவ்வொரு நாளும் தொழுகைக்காக வேண்டி பல தடவை வுழு செய்யும் படி கட்டளை இட்டுள்ளமை.
- இயன்ற நேரங்களில் குளித்துக் கொள்ள ஆரவமூட்டியுள்ளமை.
- நகம் வெட்டுதல், பற்களை சுத்தம் செய்தல், ஆடைகளை சுத்தமாக வைத்திருத்தல், நெருக்கடியான இடங்களது முடிகளை நீக்குதல் போன்ற விடயங்களை ஆர்வமூட்டி அவைகளுக்கு நன்மையும் வாக்களிக்கப்படுள்ளமை.

அல்லாஹுதஆலா தனது திரு வேதத்தில் இவ்வாரு கூறுகிறான்:

اِنَّ اللهَ يَحِبُّ التَّوَّابِيْنَ وَيُحِبُّ الْمُتَطَهِّرِيْنَ (سورة البقرة : الاية ٢٢٢ )

***'நிச்சயமாக அல்லாஹ் (தனது பாவங்களுக்காக) பச்சாதாபப் படக்கூடியவர்களையும் சுத்தமாக இருப்பவர்களையும் விரும்புகிறான்.'***

وَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ اَلطُّهُوْرُ شَطْرُ الْإِيْمَانِ (رواه مسلم)

***'சுத்தம் ஈமானில் பாதியாகும்' அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.***
***ஆதாரம் : முஸ்லிம்***

**சுத்தத்தை இந்தளவு வழியுறுத்தக் காரணம் என்ன?**

- இஸ்லாம் சுத்தத்தை ஷரீயத்துச் சட்டமாக்கியதில் பல நுட்பங்கள் அடங்கியுள்ளன. முதலில் மனிதனின் படைப்பின் சுபாவமே சுத்தத்தை விரும்புவதும், அசுத்தத்தையும் அருவருப்பானவற்றையும் வெறுக்கக்கூடியதாகவும் இருப்பது. 'தீனுல் பிதரத்' எனும் இஸ்லாம் மனிதனது இயற்கை மார்க்கமாக இருப்பதால் அவன் இயல்பிலேயே இவ்வாரான சட்டங்களையும் வகுத்திருப்பதை காணலாம்.
- முஸ்லிமுடைய கண்ணியத்தை பாதுகாப்பது.
- மனிதன் சுத்தத்தை பேனுவதற்காக வேண்டி. ஏனெனில் நோய்கள் ஏற்பட முக்கிய காரணி அசுத்தமாக இருத்தலாகும்.
- அத்துடன் அல்லாஹ்வின் சந்நிதியில் மனிதன் ஆஜராகும் போது அவன் அகமும் புறமும் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், சுத்தம் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இந்தளவு முக்கியத்தவம் பெறுகின்றது.

## اَلْمِيَاهُ الَّتِيْ يَتَطَهَّرُ بِهَا
## சுத்தம் செய்யக் கூடிய தண்ணீர்

சுத்தம் செய்யக்கூடிய தண்ணீர் என்றால் மழை நீர், கடல் நீர், கிணற்று நீர், ஆற்று நீர், ஊற்று நீர், பனி உருகிக் கிடைக்கும் நீர் என்பனவாகும். இதில் இரு வகைகள் இருப்பதை அவதானிக்கலாம். ஒரு வகை வானிலிருந்து கிடைப்பது. மற்றது பூமியில் இருந்து கிடைப்பது. இது தொடர்பாக திரு வசனமொன்று இவ்வாருள்ளது:

وَيُنَزِّلُ عَلَيْكُمْ مِّنَ السَّمَاءِ مَاءً لِّيُطَهِّرَكُمْ بِهِ (سورة الأنفال : الاية ١١)

***'அதைக் கொண்டு உங்களை சுத்தம் செய்வதற்காக வேண்டி, அவன் வானத்திலிருந்து உங்களுக்கு தண்ணீரை இறக்குகிறான்'***

### اَقْسَامُ الْمِيَاه

தண்ணீர் நான்கு வகைப்படும்

1. طَاهِرٌ مُطَهِّرٌ
2. طَاهِرٌ مُطَهِّرٌ مَكْرُوْهٌ
3. طَاهِرٌ غَيْرُ مُطَهِّرٍ
4. مُتَنَجِّسٍ

### اَلطَّاهِرُ الْمُطَهِّرُ

இந்த வதை தண்ணீர் அதனை அல்லாஹுதுஆலா என்ன தன்மையில் ஆரம்பத்தில் படைத்தானோ அதே தன்மையில் இருக்கும் பொதுவான தண்ணீர். அது அதிகமான காலம் இருப்பதனால் ஏற்படும் மாற்றம் அல்லது மண்ணின் காரணமாக ஏற்படும் மாற்றம், பாசி அதன் மீது படுவதால் ஏற்படும் மாற்றம், அது தரிபட்டுள்ள இடத்தின் காரணமாக அல்லது அது ஓடும் இடத்தின் காரணமாக ஏற்படும் மாற்றம் ஆகிய எந்த மாற்றங்களும் அதை, 'மாஉல் முத்தலக்' என்ற நிலையில் இருந்து இல்லாமலாக்கிவிடாது. ஏனெனில் இவைகள் விட்டு தண்ணீரை பாதுகாப்பது முடியாத காரியமாகும். பொதுவாக இந்த வகை தண்ணீர் சுத்தமானது என்பதற்கான ஆதாரம்:

مَارَوَاهُ الْبُخَارِيُّ وَغَيْرُهُ عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَامَ اَعْرَابِيٌّ فَبَالَ فِيْ الْمَسْجِد فَقَامَ اِلَيْه النَّاسُ لِيَقَعُوْا به فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْه وَسَلَّم دَعُوْهُ وَهَرِيْقُوْا عَلَى بَوْلِه سَجْلاً مِّنْ مَّاءٍ اَوْ ذُنُوْبًا مِّنْ مَّاءٍ فَاِنَّمَا بُعِثْتُمْ مُيَسِّرِيْنَ وَلَمْ تُبْعَثُوْا مُعَسِّرِيْنَ

*ஒரு காட்டரபி மஸ்ஜிதில் எழுந்து சிறநீர் கழித்து விட்டார். அவரை தண்டிப்பதற்காக மக்கள் அவரருகே சென்றனர். அப்பொழுது நபிஃஅவர்கள் அவரை விட்டு விட்டு அந்த சிறுநீரின் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றி விடும்படி கட்டளையிட்டார்கள். இவ்வாறு சிறுநீரில் தண்ணீரை ஊற்றச் சொன்னது அது சுத்தமாகும் தன்மை பெற்றது என்பதற்கு ஆதாரமாக கொள்ளப்பட்டது.*

## اَلطَّاهِرُ الْمُطَهِّرُ الْمَكْرُوْهُ

இது முஸம்மஷ் ஆகும். அதாவது சூரிய வெப்பத்தால் சூடாகிய தண்ணீராகும். அது மக்ரூஹ் ஆவதற்கு 3 நிபந்தனைகள் உள்ளன.

1. உஷ்னமான ஊரில் அது உண்டாவது.
2. தங்கம், வெள்ளி அல்லாத இரும்பு, செம்பு இன்னும் தட்டி செய்யப்படுவதற்கு தகுதியான, உருக்கப்படுவதற்குரிய பாத்திரங்களில் இந்த தண்ணீர் இருத்தல்.
3. அது மனிதன் (அவன் பிரேதமாக இருந்தாலும் சரியே) உடலில் அல்லது வெண்குஷ்ட நோய் ஏற்படக்கூடிய குதிரை போன்ற மிருகங்களின் உடலில் பாவிக்கப்படுவது.

இமாம் ஷாபியீ அவர்கள் எழுதியுள்ளார்கள், 'உமர் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்கள் அவ்வாரான தண்ணீரினால் குளிப்பதை வெறுக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் 'நான் சூரிய வெப்பத்தினால் சூடான தண்ணீரினால் குளிப்பதை வெருப்பது வைத்தியக் காரணங்களுக்காகத்தான். ஏனெனில் அது வென் குஷ்ட நோயை உண்டாக்கும்' என்றும் கூறுவார்கள்.

## اَلطَّاهِرُ غَيْرُ الْمُطَهِّرُ

الماء المستعمل

இது இரண்டு வகைப்படும். முதலாவது வுழு, குளிப்பு போன்ற சுத்தத்தின் கடமைகளுக்கு பாவிக்கப்பட்ட குறைந்த தண்ணீர். அது சுத்தம் என்பதற்கு ஆதாரம்:

مَارَوَاهُ الْبُخَارِيْ وَمُسْلِمْ عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللهِ رَضِيَ اللهُ عَنْهُمَا قَالَ جَاءَ رَسُوْلُ الله صَلَّى اللهُ عَلَيْه وَسَلَّمَ يَعُوْدُنِيْ وَاَنَا مَرِيْضٌ لاَ اَعْقِلُ فَتَوَضَّاَ وَصَبَّ مِنْ وُضُوْئِه عَلَيَّ

*ஜாபிர் ரலியலடலாஹூ அன்ஹூ அறிவிக்கிறாா்கள், 'நான் சுய நினைவில்லாது நோயாளியாக இருக்கும் போது நபிஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் என்னை சுகம் விசாரிப்பதற்காக வந்திருக்கிறாா்கள். வந்த அவர்கள் வுழு செய்த தணணீரை என் மீத ஊற்றியுள்ளாா்கள்.'*

ஆனால் அது பிறரை சுத்தப் படுத்தாது என்பதற்கான ஆதாரம்:

مَارَوَاهُ مُسْلِمُ وَغَيْرُهُ عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ اَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْه وَسَلَّمَ قَالَ لاَ يَغْتَسِلُ اَحَدَكُمْ فِيْ الْمَاء الدَّائِمِ اَنْ الرَّكِدُ وَهُوَ جُنُبَ فَقَالُوْا يَااَبَا هُرَيْرَةَ كَيْفَ يَفْعَلُ قَالَ يَتَنَاوَلُهُ تَنَاوُلاً

*அபூ ஹூரெய்ரா அவர்கள் அறிவிப்பது, 'தேங்கி நிற்கும் தண்ணீரில் அவர் தொடக்குள்ளவராக இருக்கும் நிலையில் ஒரவர் குளிக்க வேண்டாம்.' என்று றஸூல் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினாா்கள். அப்பொழுது மக்கள் 'ஏ அபூஹூரெய்ராவே! நபியவர்கள் எவ்வாரு அதனை (குளிப்பை) செய்து கொண்டாா்கள்?' என்று வினவ, 'அன்னாவர்கள் அள்ளி அள்ளி குளிப்பாா்கள்' என்று அபூஹூரெய்ரா விளக்கினாா்கள்.*

இவ்வாரான தண்ணீரில் வுழு செய்வதன் சட்டம் குளிப்பதற்கான சட்டத்தை போன்றேயாகும். மேலும் இவ்வாரான தண்ணீரில் குளிப்பது அந்த நீரை ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் சுத்தமற்றதாக ஆக்கிவிடும். அதனால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் குளிப்பதை தடுத்துள்ளார்கள். ஆனால் இந்த சட்டம் வேறொறு ஆதாரத்தின் மூலம் இது குறைந்த தண்ணீரில்தான் என்று கூறப்பட்டுள்ளது.

**இரண்டாவது,** (الماء المتغير) அது தண்ணீர் அதன் பக்கம் தேவைப்படாத இன்னும் அது கலந்ததன் பின்னால் தண்ணீரை விட்டு அதனை பிரிக்க முடியாததுமான சுத்தமான ஏதாவதொறு பொருள் பொதுவான தண்ணீர் மாஉல் முதலக்குடண் சேர்ந்து விடுதல். உதாரணமாக தேனீர் அல்லது குளிர் பானம் போன்றவை.

## اَلْمَاءُ الْمُتَنَجِّسْ

எந்த தண்ணீரில் ஒரு அசுத்தமான பொருள் சேர்ந்து விட்டதோ அந்த தண்ணீருக்கு சொல்லப்படும். இதிலும் இரண்டு வகையுண்டு.

**முதலாவது 'குறைந்த தண்ணீர்' (اَلْمَاءُ الْقَلِيْل)**

அது **குல்லதைனை** விட குறைந்தளவு தண்ணீராகும். இதிலே நஜீஸ் விழுவதன் மூலம் இந்த தண்ணீரும் நஜீஸாகி விடும். விழுந்தது சிறிதளவு நஜீஸாக இருந்தாலும் அல்லது நஜீஸ் விழுந்ததன் காரணமாக தண்ணீரில் நிறம், மணம், சுவை இந்த மூன்றில் எந்த மாற்றமும் ஏற்படாவிட்டாலும் சரியே.

**இரண்டாவது (اَلْمَاءُ الْكَثِيْر) அதிக அளவு தண்ணீர்**

அது **குல்லதைன்** அளவு அல்லது அதை விட அதிகமான அளவு தண்ணீராகும். நஜீஸ் இதில் கலப்பதன் மூலம் மாத்திரம் இந்த தண்ணீர் நஜீஸாக மாட்டாது. மாறாக, விழுந்த நஜீஸினால் அத்தண்ணீரின் நிறம், மணம், சுவை இவைகளில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரம் இத்தண்ணீரை நஜீஸாகக் கனிக்கப்ப படும். இதற்கு ஆதாரமாக **'மஜ்மூ'** என்ற கிதாபில் இமாம் நவவீ அவர்கள் 'தண்ணீர் குறைவாக இருந்தாலும் கூடுதலாக இருந்தாலும் அதிலே நஜீஸ் விழுந்து அதன் நிறம், மணம், சுவை ஆகியவற்றில் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே அது நஜீஸானதாக கனிக்கப்படும்' என்று குறிப்பிட்டிருக்கிரார்கள்.

## அல் குல்லதைன் (اَلْقُلَّتَانِ)

'குல்லதைன' என்பது பக்தாத் இராத்தல் 500 எடையுள்ள தண்ணீர் அளவாகும். தற்கால அளவுப்படி 210 கிலோ கிறாம் எடையுள்ள அதாவது 462.857 இறாத்தல் அல்லது 210.41 லீட்டர் அளவானதும் 46.2859 கலன் பீப்பாயொன்றை நிறப்பக்கூடியதுமாகும். அல்லது ஒன்றரை முழம் சம சதுர நீர் தொட்டியொன்று நிறைய இருக்கும் தண்ணீராகும்.

குல்லதைன் பற்றிய ஆதாரம்:

عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِىَ اللهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ وَهُوَ يُسْئَلُ عَنِ الْمَاءِ يَكُوْنُ بِالْفَلَاةِ مِنَ الْاَرْضِ وَمَا يَنُوْبُهُ مِنَ السَّبَاعِ وَالدَّوَابِ فَقَالَ إِذَا كَانَ الْمَاءُ قُلَّتَيْنِ لَمْ يَحْمِلِ الْخُبُثَ

***அப்துல்லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள். 'றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களிடம் திறந்த வெளியில் தேங்கியிருக்கும் தண்ணீரைப் பற்றியும் கால் நடைகள் இன்னும் வன விலங்குகள் தண்ணீர் குடிக்க அங்கு செல்வது பற்றியும் கேட்கப்பட்ட போது அவர்கள், 'தண்ணீர் குல்லதைனாக இருந்தால் அது அசுத்தமாக மாட்டாது' என்று கூறினார்கள்.***

ஆனால் தண்ணீர் குல்லதைனை விட குறைவாக இருந்தால் அது நஜீஸாகும். தண்ணீரில் மாற்றம் எதுவும் ஏற்படா விட்டாலும் சரியே.

قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِذَا اسْتَيْقَظَ اَحَدُكُمْ مِنْ نَوْمِهِ فَلاَ يَغْمِسْ يَدَهُ فِي الْمَانَاءِ حَتَّى يَغْسِلُهَا ثَلاَثًا فَإِنَّهُ لاَ يَدْرِيْ اَيْنَ بَاتَتْ يَدَهُ (رواه مسلم)

***நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள், 'உங்களில் எவரும் தூக்கத்தில் இருந்து எழுந்தால் அவருடைய கைகளை மூன்று முறை கழுவும் வரை அவைகளை பாத்திரத்தினுள் போட வேண்டாம். ஏனெனில் அவருடய கைகள் இரவிலே எங்கிருந்தது என்பது அவருக்குத் தெரியாது'***

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தூக்கத்தில் இருந்து எழுந்தவரை அவரது கைகளை பாத்திரத்தில் இடுவதை விட்டும் தடுத்தது அவரது கைகளில் கண்ணுக்கப் புலப்படாத நஜீஸ்கள் இருக்கும் என்பதால்தான். கண்ணுக்குத் தெரியாத நஜீஸ் தண்ணீரில் மாற்றத்தை ஏற்படுத்தாத போதிலும் அது தண்ணீரை அசுத்தமாக்கி விடும்.

மேற் கூறிய நான்கு வகைகளும் சுத்தம் செய்வதற்கு தகுதியானவை என்பது அர்த்தமல்ல. மாறாக முதலாவது வகையான **அத்தாஹிருல் முதஹ்ஹிரும்** இரண்டாவது வகையான **அத்தாஹிருல் முதஹ்ஹிருல்** மக்ருஹும் தான் சுத்தம் செய்வதற்கு தகுதியானவை. அதிலும் இரண்டாவது வகையை உடம்பில் பாவிப்பது மக்ரூஹ் ஆகும்.

மூன்றாவது வகையான **அத்தாஹிருல் கைருல் முதஹ்ஹி**ரைக் கொண்டு சுத்தம் செய்ய முடியாது. ஆனால் அது தன்னிலே சுத்தமானது. எனவே அது குடிப்பது, சமைப்பது போனற் தேவைகளுக்கு பாவிக்கக் கூடியதாகும்.

நான்காவது வகையான **அல் முதனஜ்ஜிஸ்** எந்த ஒன்றுக்கும் பயன் படுத்த முடியாதது.

## பாத்திரங்கள் (اَلْاَوَانِيْ)

**அல் அவானி** என்றால் திரவங்களும் ஏனைய பொருட்களும் வைக்கப்படும் பாத்திரங்களாகும். இதில் பல விடயங்களை கவணிக்க வேண்டியுள்ளது.

### 1) தங்கம் வெள்ளிப் பாத்திரங்களை பாவிப்பதன் சட்டம்

தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தவிர தங்கம், வெள்ளிப் பாத்திரங்களை பாவிப்பதற்கு அனுமதி இல்லை.

عَنْ حَذَيْفَةَ رَضِىَ اللهُ عَنْهُ قَالَ سَمِعْتُ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ لاَ تَلْبَسُوْا الْحَرِيْرَ وَلَا الدِّيْبَاجَ وَلاَ تَشْرَبُوْا فِيْ آنِيَةَ الذَّهَبِ وَالْفِضَّةَ وَلاَ تَأْكُلُوْا فِيْ صَحَافِهَا فَاِنَّهَا لَهُمْ فِيْ الدُّنْيَا وَلَنَا فِيْ الْاَخِرَةَ

***நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் 'நீங்கள் பட்டாடைகளை அணிய வேண்டாம். இன்னும் தங்கம், வெள்ளிப் பாத்திரங்களில் குடிக்கவும் வேண்டாம். சாப்பிடவும் வேண்டாம். அவை இவ்வுலகத்தில் காபிஃகளுக்குரியது. மறுமையில் எங்களுக்குரியது'***

சாப்பிடுவது, குடிப்பதற்குரிய சட்டம் போன்றது தான் ஏனைய பாவைனைகளுக்குரிய சட்டமும். அத்துடன் பாவிப்பது ஹராம் என்பது ஆண்கள், பெண்கள் இருவருக்கும் பொதுவானதே.

அவற்றைப் பாவிப்பது போன்றது தான் அவற்றை அழகுக்காக வேண்டி சேகரித்த வைப்பதும். ஏனெனில் எவைகளை பாவிப்பது ஹராமோ அவைகளை அழகுக்காக சேமித்து வைப்பதும் கூடாது.

### 2. தங்கம் இன்னும் வெள்ளியை கொண்டு ஒட்டுப் பொடப்பட்ட பாத்திரங்களைப் பாவிப்பதன் சட்டம்.

பொதுவாக தங்கம், வெள்ளியை கொண்டு ஒட்டுப் போடப்பட்ட பாத்திரங்களை பாவிப்பது கூடாது. ஒட்டு சிறியதானாலும் பெரியதானாலும் சரியே. சிறிய ஒட்டு அலங்காரத்திட்காக இல்லாமல் போடப்பட்டிருந்தால் அது **ஜாஇஸ்** ஆகும். பெரிய ஒட்டு அலங்காரத்திட்காக போடப் பட்டிருந்தால் அது ஹராமாகும். சிறிய ஒட்டு அலங்காரத்திட்காக போட்டிருந்தாலும், அல்லது பெரிய ஒட்டு தேவைக்காக போட்டிருந்தாலும் அது மக்ரூஹ் ஆகும்.

பெரிய ஒட்டுப் போட்டதை தேவையின் நிமித்தம் பாவிப்பது ஹராம் அல்ல. இதற்கு ஆதாரம்:

عَنْ عَاصِم الاَحْوَل رَضِىَ اللهُ عَنْهُ قَالَ رَاَيْتُ قَدْحَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْه وَسَلَّمَ عِنْدَ اَنَسِ بْنِ مَالِك وَكَانَ قَدْ انْصَدَعَ فَسَلْسَلَهُ بِفِضَّةٍ وَقَالَ اَنَسٍ رَضِىَ اللهُ عَنْهُ لَقَدْ سَقَيْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فِيْ هَذَا الْقَدْحِ اَكْثَرَ مِنْ كَذَا وَكَذَا ( رواه البخاري )

*ஆஸிமுல் அஹ்வல் ரலியல்லாஹு அன்ஹு கூறினார், 'நான் அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய பாத்திரத்தை கண்டேன். அது உடைந்திருந்தது. அதனை வெள்ளியால் அடைத்திருந்தார்கள்.'*

*அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார்கள் 'நான் அதிகமான விடுத்தங்கள் அந்த பாத்திரத்திலே நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு அருந்துவதற்கு கொடுத்துள்ளேன்.*

**3. பெருமதி வாய்ந்த கனிப்பொருள் மூலம் செய்யப்பட்ட பாத்திரங்களை பாவிப்பதன் சட்டம்.**

முத்து வைரம் போன்ற பெருமதி மிக்க கனிப் பொருள்கள் மூலம் செய்யப்பட்ட பாத்திரங்களை பாவிப்பது கூடும். ஏனெனில் அவைகளை பாவிப்பது தவிர்க்கக் கூடிய எந்த ஆதாரங்களும் இல்லை.

**4. காபிஃர்களின் பாத்திரங்களை பாவிப்பது பற்றிய சட்டம்**

காபிஃர்களின் பாத்திரங்களை பாவிப்பது ஆகும். அதற்கு ஆதாரம்:

اِنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ فَاغْسِلُوْهَا وَكُلُوْا فِيْهَا (رواه البخاري)

*நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள். 'அவற்றை கழுவி விட்டு சாப்பிடுங்கள்'*

அவற்றை கழுவுமாறு ஏவியதன் காரணம் அவர்கள் அவற்றில் பன்றியின் மாமிசம், சாராயம் போன்ற ஹராமானவற்றை சாப்பிட உபயோகித்து இருப்பார்கள் என்ற சந்தேகம்தான். அவர்களின் ஆடைகள் இன்னும் இதர பொருட்களுக்கும் உள்ள சட்டம் இதே போன்றதே.

## சுத்தத்தின் வகைகள் (اَنْوَاعُ الطَّهَارَةِ)

சுத்தம் இரு வகைப்படும்.

1) அசுத்தத்திலிருந்து சுத்தமாகுதல். (اَلطَّهَارَةُ مِنَ النَّجَاسَتِ)

2) ஹதஸ் எனும் தொடக்கிலிருந்து சுத்தமாகுதல். (اَلطَّهَارَةُ مِنَ الْحَدَث)

1. அசுத்தத்திலிருந்து சுத்தமாகுதல்.

நஜீஸ் என்றால் அரபு மொழியில் அனைத்து அசுத்தங்களுக்கும் சொல்லப்படும் வார்த்தையாகும். நஜீஸ் என்றால் ஷரீயத் கண்ணோட்டத்தில் தொழுகை ஏற்கப் படுவதை தடுக்கக் கூடிய அசுத்தத்திற்கு சொல்லப் படும். உதாரணமாக இரத்தம் இன்னும் சிறுநீர் போன்றவை.

**தன்னிலே நஜீஸான பொருட்கள்** (اَلْأَعْيَانُ النَّجِسَةُ)

இவை அதிகமாக உள்ளது. அதில் முக்கியமான 7 வகைகள் பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1. சாராயம் மற்றும் போதை தரக்கூடிய அனைத்து திரவப்பட்ட பொருட்களும்.

اِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْأَنْصَابُ وَالْأَزْلَامُ رِجْسٌ (سورة المائدة : الاية ٩٠ )

*'நிச்சயமாக சாராயம், சூதாட்டம், விக்கிரக ஆராதனை, அம்பெறிந்து குறி கேட்டல் ஆகிய இவைகள் நஜீஸாகும்.'*

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كُلُّ مُسْكِرٍ خَمْرٌ وَكُلُّ خَمْرٍ حَرَامٌ (رواه مسلم )

*நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் 'போதையை ஏற்படுத்தக் கூடிய அனைத்து வஸ்துக்களும் சாராயம் ஆகும். அவையனைத்தும் ஹராமாகும்.'*

2. நாய் இன்னும் பன்றியாகும்.

قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ طُهُوْرُ اِنَاءِ اَحَدِكُمْ إِذَا وَضَعَ فِيْهِ الْكَلْبُ اَنْ يَّغْسِلَهُ سَبْعَ مَرَّاتٍ اَوْ لَاهُنَّ بِالتُّرَابِ (رواه مسلم)

*நபிகள் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் 'உங்களுடைய பாத்திரத்திலே நாய் வாயை வைத்து விட்டால், அதனை சுத்தப் படுத்துவதாகிறது 7 முறை கழுவுவதாகும். அதில் முதலாவது விடுத்தம் மண்ணைக் கொண்டு கழுவ வேண்டும்.*

3. செத்து விட்டவைகள்

இதில் ஷரீயத்தின் படி எல்லா மிருகங்களும் அடங்கும். அல்லாஹுதஆலா கூறுகிறான்:

حُرِّمَتْ عَلَيْكُمُ الْمَيْتَةُ (سورة المائدة : الاية ٤ )

*'செத்தவைகள் உங்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ளன'*

செத்தவைகள் நஜீஸாக இருப்பதால்தான் ஹராமாக்கப்பட்டுள்ளன. சிலைகளின் பெயரால் அறுக்கப்பட்டவைகளும், அல்லாஹ்வின் பெயரல்லாதவைகளுக்காக அறுக்கப்பட்டவைகளும் செத்தவைகள் என்றே கருதப்படும்.

அல்லாஹ்தஆலா கூறுகிறான்:

وَمَا اُهِلَّ لِغَيْرِاللهِ بِهِ (سورة المائدة )

ஆனால் மூன்று வஸ்துக்கள் இறந்து விட்டாலும் அசுத்தமாவதில்லை.

1. மனிதன் இறந்துவிட்டால் அவன் நஜீஸாக மாட்டான். அல்லாஹ் இவ்வாரு கூறுகின்றான்:

وَلَقَدْ كَرَّمْنَا بَنِيْ آدَمَ (سورة الإسراء : الاية ٧٠ )

*'ஆதமுடைய மக்களை நாம் கண்ணியப்படுத்தியுள்ளோம்'*

இதனடிப்படையில் மனிதன் இறந்தாலும் நஜீஸாக கருதப்பட மாட்டான். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இவ்வாரு கூறினார்கள்,

سبحان الله ان المسلم لا ينجس

*'அல்லாஹ் தூய்மையானவன். ஆகையால் (அவனை ஏற்கும்) முஸ்லிமும் நஜீஸாக மாட்டான்'*

2வதும் 3வதும்,

மீனும், வெட்டுக்கிளியும். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

اُحِلَّتْ لَكُمْ ...

***'உங்களுக்கு இரண்டு உயிரற்றவைகளும் இரண்டு இரத்தங்களும் ஹலாலாக்கப்பட்டுள்ளன. இறந்தவை இரண்டு, மீனும் வெட்டுக்கிளியுமாகும். இரத்தங்கள் இரண்டு, ஈரலும் நுரையீரலும் ஆகும்.'***

4. ஓடக்கூடிய இரத்தம். காயத்திலிருந்து வடியும் சலமும் இதில் சேர்ந்தததுதான். அல்லாஹுதஆலா கூறுகிறான்,

اَوْ دَمًا مَّسْفُوْحًا اَوْ لَحْمَ خِنْزِيْرٍ فَاِنَّهُ رِجْسٌ (سورة الانعام :الاية ١٤٣ )

***'அல்லது ஓடக்கூடிய இரத்தமும், பன்றியின் மாமிசமும் நிச்சயமாக அவை அசுத்தமானவை'***

ஈரலும் நுரையீரலும் முன் குறிப்பிடப்பட்ட ஹதீஸின் அடிப்படையில் நஜீஸிலிருந்து நீக்கப்பட்டன.

5. மனிதனின் சிறுநீரும், மலமும், மிருகங்களின் சிறுநீரும், விட்டையும். ஹதீஸில் இவ்வாரு வந்துள்ளது.

ان اعرابيا بال في المسجد فقال رسول الله صلى الله عليه وسلم صبّو عليه ذنوبا من ماء

***ஒரு காட்டரபி மஸ்ஜிதில் சிறுநீர் கழித்து விட்டார். 'அதன் மீது ஒரு வாளித் தண்ணீரை ஊற்றிவிடுங்கள்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கட்டளையிட்டார்கள்.***

அதன் மீது தண்ணீரை ஊற்றி விடும்படி கூறிய அடிப்படையில் அது நஜீஸ் என்று ஆதாரம் பிடிக்கப்பட்டது.

6. ஒரு பிராணி உயிருடன் இருக்கம் போது அதிலிருந்து பிரிந்து விட்ட உறுப்பு, அது எந்த பகுதியாக இருந்தாலும் நஜீஸாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

ما قطع من بهيمة فهو ميتة (رواه الحاكم)

***'உயிருள்ள பிராணியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பகுதி இறந்த பகுதியே ஆகும்'***

எந்த மிருகம் உண்பதற்கு ஹலாலோ, அதன் உரோமமும் சுத்தமாதனதாகும்.

அல்லாஹுதஆலா கூறுகிறான்:

وَمِنْ اَصْوَافِهَا وَاَوْبَارِهَا وَاَشْعَارِهَا اَثَاثًا وَّمَتَاعًا اِلَى حِيْنٍ (سورة النحل)

***'செம்மறியாட்டின் உரோமங்கள், ஒட்டகத்தின் உரோமங்கள், வெள்ளாட்டின் உரோமங்கள் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு ஆடைகளையும் இன்னும் குறிப்பிட்ட காலம் வரை சுகத்தையும் ஆக்கி வைத்துள்ளான்'***

எந்த மிருகத்தின் மாமிசத்தை உண்ண முடியாதோ அதனுடைய பாலும் ஹராமாகும். உதாரணமாக கழுதையின் பாலும் மாமிசத்தை போலவே ஹராமாகும். அதன் மாமிசம் நஜீஸாகும்.

**(النجاسة العينية والنجاسة الحكمية)**

**நஜீஸில் இரு வகையான ஐனிய்யா மற்றும் ஹுக்மிய்யா**

ஐனிய்யாவான நஜீஸ் என்பது (கண்களுக்கு புலப்படும் நஜீஸ்) எவற்றை பார்க்க முடியுமான அளவு பெரிதாக உள்ளதோ அவ்வகை நஜீஸாகும். உதாரணமாக மலம், சிறுநீர், இரத்தம் போன்றவை.

ஹுக்மிய்யாவான நஜீஸ் (கண்களுக்கு புலப்படாத நஜீஸ்)

என்பது காய்ந்து அதனால் ஏற்பட்ட பிரதிபலிப்பும் நீங்கி நிறத்திலோ மனத்திலோ எந்த பிரதிபலிப்பும் மீதமாக இருக்காமலிருக்கும் நஜீஸாகும். உதாரணமாக சிறுநீர் ஆடையில் பட்டு பின்பு காய்ந்து விடுகிறது. இன்னும் அந்த ஆடையில் நஜிஸுடைய எந்த பிரதிபலிப்பும் இல்லாமல் இருப்பதை போன்றதாகும்.

**கடினமான, நடுத்தரமான இன்னும் இலகுவான நஜீஸ் வகைகள்.**

1. கடினமான நஜீஸ் (اَلْمُغَلَّظَة)

இது நாய் பன்றியை உள்ளடக்கியது. அவை கடினமான நஜீஸ் என்பதற்கு ஆதாரம் இவ்வகை ஒரு தடவை தண்ணீரினால் கழுவி விடுவதால் நீங்கிவிடாது. மாறாக ஏழு விடுத்தம் கழுவுவதோடு அதில் ஒரு தடவை மண்ணை கலந்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய வேண்டும் என்பற்கு ஆதாரமான ஹதீஸ் முன்னால் கூறப்பட்டது. நாயை விட பன்றி தாழ்ததாக இருப்பதனால் அதனை நாயுடன் சேர்த்து கியாஸ் பிடிக்கப்பட்டது.

2. இலகுவான நஜீஸ் (اَلْمُخَفَّفَة)

இது சிறு ஆண் குழந்தையின் சிறுநீராகும். ஆனால் அது பாலைத் தவிர வேறெதையும் சாப்பிடாத இன்னும் இரண்டு வயதை அடையாத குழந்தையாக இருக்க வேண்டும். அது இலகுவான நஜீஸ் என்பதற்கு ஆதாரம் அந்த நஜீஸின் மீது தண்ணீரை தெளிப்பதன் மூலமாக அதனுடைய நஜீஸ் நீங்கிவிடும். ஆனால் தெளிக்கும் தண்ணீர் நஜீஸ் பட்ட இடம் முழுவதும் சேர வேண்டும். ஆனால் தண்ணீரை ஊற்றத் தேவையில்லை.

عن ام قيس بنت محصن رضى الله عنها أنها اتت بابن لها صغير لم يأكل الطعام إلى رسول الله صلى الله عليه وسلم فبال على ثوبه فدعا بماء فنضحه ولم يغسله (رواه البخاري ٢٠٢١ )

3. நடுத்தரமான நஜீஸ் (المتوسطة)

இது நாய் பன்றி அல்லாத நஜீஸாகும். மேலும் பாலைத் தவிர வேறெதையும் சாப்பிடாத பிள்ளைகளின் சிறுநீர் அல்லாத நஜீஸாகும். உதாரணமாக ஒரு மனிதனின் சிறுநீரைப் போல. மேலும் மிருகங்களது விட்டைகளைப் போல. மேலும் இரத்தத்தைப் போல. இதில் தண்ணீரை தெளிப்பதால் அது நீங்காவிட்டாலும் ஒரு தடவை கழுவி விட்டால் சுத்தமாக ஆகிவிடும். பல தடவை கழுவ வேண்டும் என்ற கட்டாயமில்லை.

عن انس قال : كان النبي صلى الله عليه وسلم إذا تبرز لحاجته اتيته بماء فيغسل به (رواه البخاري ٢١٤ )

***அனஸ் ரலியல்லாஹு அன்ஹுவை தொட்டும் அறிவிக்கப்படுகிறது. நபியவர்கள் தனது தேவையை பூரத்த்தி செய்வதற்கு வெளியே சென்றால் நான் அவர்களுக்கு தண்ணீர் எடுத்துச் செல்வேன். அவர்கள் அதனை கொண்டு கழுவிக்கொள்வார்கள்.***

***புஹாரி 214***

عن علي قال : كنت رجلا مذاء فستحييث ان أسئل رسول الله صلى الله عليه وسلم فأمرت المقداد بن الأسود فسأله فقال فيه الوضوء ومسلم : يغسل ذكره ويتوضأ (رواه البخاري : ١٧٤ وسلم :٣٠٣ )

***அலி ரலியல்லாஹு அன்ஹுவை கூறுகிறார்கள் 'நான் அதிகமாக 'மதீ' வெளியாகக்கூடிய மனிதனாக இருந்தேன்.ஆனால் அதை பற்றி நபியவர்களிடம் கேட்க வெட்கப்பட்டேன். எனவே நான் மிக்தாத் பின் அஸ்வத் ரலியல்லாஹு அன்ஹுவை அவர்களை நபியவர்களிடம் இது விடயமாக கேட்குமாறு சொன்னேன். அவர்களும் கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் 'வுழு செய்து கொள்ள வேண்டும்' என்று கூறினார்கள். இன்னுமொறு ரிவாயத்தில் 'தனது அபத்தை கழுவி வுழு செய்துக் கொள்வார்' என்று கூறியதாகவும் வந்துள்ளது.***

عن عبد الله بن مسعود قال : أن النبي صلى الله عليه وسلم الغائط فأمرني أن اتيه بثلاثة أحجار فوجدت حجرين والتمست الثالث فلم اجده فأخذت روثة فأتيته بها فأخذ الحجرين وألقى الروثة وقال هذا ركس ( رواه البخاري : ١٥٥ )

***அப்தல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள் 'நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மலம் கழிக்கச் சென்றார்கள். செல்லும் போது மூன்ற கற்களை கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். நான்***

*இரண்டு கற்களைத்தான் கண்டெடுத்தேன். மூன்றாவது கல்லொன்று கிடைக்கவில்லை. அதனால் ஒரு விட்டையை எடுத்து அதனை நபியவர்களிடம் கொடுத்தேன். நபியவர்கள் இரண்டு கற்களை மாத்திரம் எடுத்துவிட்டு விட்டையை வீசி விட்டார்கள். வீசி விட்டு 'அது நஜீஸாகும்' என்று கூறினார்கள்.*

இந்த ஹதீஸ் அதில் சொல்லப்பட்ட வஸ்துக்கள் நஜீஸ் என்பதற்கு ஆதாரமாகும். இவைகளிலிருந்து அதில் சொல்லப்படாத அது போன்ற வஸ்துக்களையும் கியாஸ் மூலம் தீர்ப்பு எடுக்கப்பட்டது.

**நஜீஸ்களிலிருந்து சுத்தமாகும் முறை**

<u>கடினமான நஜீஸ்களிலிருந்து சுத்தமாகும் முறை</u>

இது நாய் மற்றும் பன்றி ஆகியவைகளுடைய நஜீஸாகும். இவை ஏழு முறை கழுவினால் தவிர சுத்தமாகாது. அதில் ஒரு லிடுத்தம் மண்ணைக் கொண்டும் கழுவ வேணடும். அந்த நஜீஸ் வெளிரங்கமாக தெரியக்கூடியதானாலும் அல்லது கண்ணுக்குத் தெரியாததாக இருந்தாலும் சரி. இன்னும் அந்த நஜீஸ் ஆடையில் அல்லது உடம்பில் எந்த இடத்தில் இருந்தாலும் சரி. இதற்து ஆதாரம் மேற்கூறப்பட்ட 'நாய் வாயை வைத்த விட்டால்' என்று வந்துள்ள ஹதீஸாகும்.

<u>இலகுவான நஜீஸ்களிலிருந்து சுத்தமாகும் முறை.</u>

இது பாலைத் தவிர வேறெதையும் சாப்பிடாத குழந்தையின் சிறுநீராகும். இந்த நஜீஸில் தண்ணீரை பூர்த்தியாக தெளிப்பதன் மூலம் அது சுத்தமாகிவிடும். அந்த நஜீஸ் வெளிரங்கமாக தெரியக்கூடியதானாலும் அல்லது கண்ணுக்குத் தெரியாததாக இருந்தாலும் சரி. இன்னும் உடம்பில் இருந்தாலும் சரி அல்லது ஆடையில் இருந்தாலும் சரி. அல்லது இடத்தில் இருந்தாலும் சரி.

<u>நடுத்தரமான நஜீஸ்களிலிருந்து சுத்தமாகும் முறை.</u>

இது நாய் பன்றியும் அல்லாத, சிறு பிள்ளையின் சிறுநீரும் அல்லாத ஏனைய நஜீஸ் வகைகளாகும். இந்த நஜீஸிலிருந்து சுத்தமாகுவது என்பது அதன் மீது தண்ணீரை ஊற்றி அந்த நஜீஸூம், அதன் பிரதிபலிப்பும், அதனுடைய நிறம், மனம், சுவை போன்ற தன்மைகளும் நிங்கிவிடுவதையே குறிக்கும். அந்த நஜீஸ் வெளிரங்கமாக தெரியக்கூடியதானாலும் அல்லது கண்ணுக்குத் தெரியாததாக இருந்தாலும் சரி. இன்னும் உடம்பில் இருந்தாலும் சரி அல்லது ஆடையில் இருந்தாலும் சரி. அல்லது இடத்தில் இருந்தாலும் சரி. ஆனால் நஜீஸின் நிறத்தை நீக்குவது சிரமமாக இருந்தால் அதை விட்டுவிட அனுமதி உண்டு. உதாரணமாக இரத்தம் போன்றவற்றின் கறையை நீக்கவது சிரமமாக இருக்கலாம்.
**<u>நாய் பன்றி அல்லாத செத்த மிருகங்களின் தோலை சுத்தப்படுத்தவது</u>**

நாய் பன்றி அல்லாத செத்த மிருகங்களின் தோல் அதனை பதனிடுவதன் மூலமாக சுத்தமாகி விடும். பதனிடுவது என்றால் தோலை அழுகச் செய்யக்கூடிய ஈரலிப்பை கூர்மையான கருவியின் மூலம் முழுமையாக நிக்கி விடுவதாகும். அந்த தோலை தண்ணீரில் போட்டால் அந்த நாற்றம் திரும்பவும் வராமல் இருக்கக்கூடியதாக மாறி விடவேண்டும்.

قال رسول الله صلى الله عليه وسلم اذا دبغ الا هاب فقد طهر (رواه مسلم ٣٤٤ )

***நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் 'தோல் பதனிடப்பட்டுவிட்டால் அது சுத்தமாகி விடும்'***

பதனிட்டப் பின் தோலை தண்ணீரில் கழுவுவது வாஜிபாகும். ஏனெனில் அது நஜீஸான மருந்துகளை இட்டு பதனிடப்படுகிறது. அது மட்டுமின்றி பதனிடுவதற்கு முன் இருந்த நஜீஸ் அந்த மருந்துகளை அசுத்தமாக்கி விடுவதால் அவைகளை நீக்குவது அவசியமாகும்.

**மண்ணிக்கப்படக்கூடிய சில நஜீஸ்கள் (المعفوات)**

இஸ்லாம் என்பது சுத்தத்தை வழியுறுத்தக்கூடிய மார்க்கமாகும். இதனால்தான் நஜீஸ்கள் விடயத்தில் இந்தளவு கவணம் செலுத்தமாரு நம்மை ஆர்வமூட்டி வழிகளையும் தெளிவு படுத்துகிறது. நஜீஸ்களிலிருந்து சுத்தமாகுவதை தொழுகை நிறைவேறுவதற்கு நிபந்தனையாகவும் ஆக்கியுள்ளது. அது உடலிலொ, இடத்திலோ உடையிலோ எதில் இருந்தாலும் சரியே.

அதே சமயம் இஸ்லாம் இலகுவையே நாடுகிறது. எனவேதான் சில நஜீஸ்களை நீக்குவது சிரமமாக இருக்கும் பட்சத்தில் அது விடயத்தில் மண்ணிப்பையும் அளிக்கிறது. அவ்வாரு மண்ணிக்கப்பட்ட சில நஜீஸ்களை கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

1. சாதாரணமாக நமது கண்களுக்கு தெரியாத, ஆடையிலோ உடலிலோ தெரித்துவிட்ட சிறுநீர். இது கடினமான, இலகுவான மற்றும் நடுத்தரமான நஜீஸாக இருந்தாலும் சரியே.

2. குறைந்த இரத்தம், குறைந்த சீழ் சலம், நுளம்பின் இரத்தம், ஈயின் மலம் போன்றவை. ஆனால் அதை வேண்டுமென்றே புசிக்கொள்ளாததாகவும், மனிதனின் செயலால் ஏற்படாததாகவும் இருக்க வேண்டும்.

3. இரத்தம் மற்றும் சலம், அவை அதிகமானாலும் சரி. ஆனால் அது வெளிப்பட்ட மனிதனிலேயே, அது வெளியான இடத்தை சுற்றியே இருந்தால் அது மண்ணிக்கப்படும்.

4. விதை விதைக்கக் கூடிய நேரத்தில் படக்கூடிய விட்டைகள். மேலும் பால் கறந்து கொண்டிருக்கும் போது பாலில் விழக்கூடிய அதிகமில்லாத கால் நடைகளின் விட்டை. அதிகமாகி விட்டால் அது பாலில் நிறத்தை மற்றி விடும்.

5. தண்ணீரில் இருக்கக்கூடிய மீனின் விட்டைகள். அது மாற்றமடையாமல் இருக்க வேண்டுமெ. மேலும் பறவைகள் அதிகமாக பறந்து திரியக் கூடிய இடங்களில் அவைகளின் மலம் மண்ணிக்கப்பட்டதாகும். உதாரணமாக மக்கா, மதீனா மஸ்ஜிதுகள் சூழ உள்ள இடம். ஏனெனில் இதை தடுப்பது முடியாத காரியமாகும்.

6. இறைச்சிக் கடைக்காரரின் உடையில் மற்றும் உடலில் படும் சிறிதளவு இரத்தம்.

7. வாந்தி எடுதத்தின் மூலமாக நஜீஸான குழந்தையின் வாய் அதனது தாயின் மார்பகத்தில் வைத்தாலும் அது நஜீஸாகாது.

8. பாதையில் இருக்கும் மண் மனிதனின் மேலில் பட்டால்.

9. உடம்பில் ஓடக்கூடிய இரத்தம் இல்லாத ஈ. கொசு, தேனீ, எறும்பு போன்ற பூச்சி இறந்த நிலையில் ஒரு பானத்தில் விழுதல். ஆனால் அது தானாக விழ வேண்டும். மேலும் அது எந்த திரவத்தில் விழுந்ததோ அதன் நிறம் மாற்றமடையாமல் இருக்க வேண்டும்.

رواه البخاري وغيره عن أبي هريرة : أن رسول الله صلى الله عليه وسلم قال : إذا وقع الذباب في إناء أحدكم فليغمسه كلة
ثم يطرحه في أجد جناحيه شفاء وفي الأخرداء

***நபியவர்கள் கூறினார்கள் 'உங்களில் ஒருவருடைய (பானம் ஒன்றுள்ள) பாத்திரத்தில் ஈ விழுந்தால் அதை முழுமையாக பாத்திரத்தில் மூழ்கடித்து பின்பு அதை எறிந்து விட்டு (பிறகு பானத்தை அருந்தவும்) அதன் ஒரு இறக்கையில் நோயும் மற்ற இறக்கையில் அதற்கான ஷிபாவும் உள்ளது.'***

அந்த ஈ நஜீஸானதாக இருந்தால் அதை பானத்தில் மூழ்கி விட்டு அருந்தும் படி நபியவர்கள் கூற மாட்டார்கள் என்ற அடிப்படையில் மேற் கூறிய சட்டம் வகுக்கப்பட்டது. ஓடக்கூடிய இரத்தம் இல்லாத ஈ போன்ற சகல பூச்சிகளும் இதே அடிப்படையில் கியாஸ் பிடிக்கப்பட்டது.